1995 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Speaker may allow another Member.

64—

மணலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்

**38120—திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி புதிய கட்டிடம் கட்டவும், கூடுதலாக மருத்துவர்களை நியமனம் செய்யவும் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய புதிய மாவட்டத்தில் மணலூர்பேட்டை ஒரு சிறிய பேரூராட்சி. அங்கேயிருந்து மக்கள் வர வேண்டுமென்றால் திருக்கோவிலூர் டவுனுக்குத்ததான் வரவேண்டும். எனவே அங்கே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டி, புதிய டாக்டர்களை நியமித்து, பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே புற நோயாளிகள் 50 பேர் தினந்தோறும் வருகிறார்கள். தற்போது ஒரு மருத்துவர் இருக்கிறார். போதிய அளவுக்கு இருக்கிறது என்று எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. அருகாமையிலே, 15 கிலோமீட்டரிலே, ஒரு பெரிய மருத்துவமனை இருக்கிறது. எனவே அவசியம் என்ற நிலைமை இருக்குமானால், அதைப் பற்றி ஆய்வு செய்து, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.